**செய்தி வெளியீடு எண்: 599** **நாள்: 9–10–2012**

**செய்தி வெளியீடு**

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் சென்னை மெரினாப்பகுதியில் பழுதடைந்துள்ள அடுக்குமாடிக்குடியிருப்புகளை அகற்றிவிட்டு புதிய குடியிருப்புகள் கட்ட ஏதுவாக, நொச்சிநகர் மற்றும் நொச்சிக்குப்பம் போன்ற பகுதி மக்கள் தற்காலிகமாகக் குடியேற 2468 தற்காலிகக் குடியிருப்புகள் அனைத்து அடிப்படை வசதிளுடன் சுமார் ரூ.16.96கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன.

அதில் வாரியத்தின் மூலம் ஒதுக்கீடு பெற்ற நொச்சிநகர் மற்றும் நொச்சிக்குப்பம் குடியிருப்புதாரர்கள் வசித்து வருகின்றனர். அவற்றின் பராமரிப்பு மற்றும் மின் உபயோகக் கட்டணமாக மாதம் சுமார் ரூ.5.00 இலட்சம் வாரியத்தின் மூலம் செலவிடப்பட்டு வருகிறது. இந்நிலையில் அந்த தற்காலிகக் குடியிருப்புகளை வாடகைக்கு விடுதல், அவற்றில் சமூக விரோத செயல்களில் ஈடுபடுதல் போன்ற புகார்கள் பொதுமக்களிடம் இருந்தும் காவல்துறையினரிடம் இருந்தும் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளன.

எனவே, இந்த தற்காலிகக் குடியிருப்புகளில் நொச்சிநகர் மற்றும் நொச்சிக்குப்பம் திட்டப்பகுதி ஒதுக்கீடுதாரர்கள் தவிர்த்து வேறு எவரேனும் ஆக்ரமிப்பு செய்துள்ளனரா? எனவும் சட்டத்திற்குப் புறம்பான செயல்கள் நடைபெறுகின்றனவா ? எனவும் கண்டறிய **திடீர்** சோதனைகள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதுசமயம் ஒதுக்கீடுதாரர்கள் தங்களது ஒதுக்கீட்டு ஆணைகளுடன் தவறாமல் நேரில் இருக்க வேண்டும் எனவும், அலுவலர்கள் கோரும் அனைத்து விபரங்களை அளித்திட வேண்டும் எனவும், தற்காலிகக் குடியிருப்புகளில் வேறு எவரேனும் வசித்து வருவதோ, சட்டத்திற்கு புறம்பான செயல்கள் நடைபெறுவதோ கண்டறியப்பட்டால் அவர்களது ஒதுக்கீடுகள் இரத்து செய்யப்படும் எனவும், ஆக்ரமதாரர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

எனவே தமிழ்நாடு குடிசைமாற்று வாரிய அலுவலர்கள் தணிக்கையில் ஈடுபடும் போது ஒதுக்கீடுதாரர்கள் தகுந்த ஆவணங்களை அளித்து முழு ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் இதேநிலை நீடித்து அரசுப்பணிகளுக்கு குந்தகம் விளைவிக்கும் செயல்களில் ஈடுபட்டால் அவ்வாறான தற்காலிகக் குடியிருப்புகளின் மின் இணைப்புகள் துண்டிக்கப்படும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. எனவே வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் “திடீர்'' சோதனைகளுக்கு இப்பகுதி மக்கள் முழு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலாண்மை இயக்குநர்
த.நா.கு.ப.மா.வாரியம்

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**